இருந்து, அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இதிலே எவ்வளவு அக்கறை காட்டுகிறார்களோ, அதைப்போலவே ஆளும் கட்சிக்கும் அதிலே அக்கறை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், தேவர் திருமகன் சிலையை வைத்தவரே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தச் சிலையைத் திறப்பதற்காக அன்றையதினம் குடியரசுத் தலைவராக இருந்த மாண்புமிகு திரு. கிரி அவர்களை அழைத்து வந்து விழா எடுத்தார்கள். ஆனால், வேண்டும் என்றே, யாரோ ஒருவர் தவறு செய்துவிட்டார் என்பதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல் இல்லை. உடனடியாகக் கண்டுபிடித்து யார் அந்தத் தவறான செயலிலே ஈடுபட்டாரோ அவரைக் கைது செய்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்மீது விவாதம் நடைபெற இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுசம்பந்தமாக அரசினுடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட எதிரி கைது செய்யப்பட்டாகி விட்டது. அதற்குப் பிறகும் நீங்கள் நேரத்தை வீணாக்கும் நோக்கத்தோடு செயல்பட்டால் என்ன அர்த்தம்? *(குறுக்கீடுகள்)* சரி, இதைக் கடைசியாக எடுத்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

## (ஆ) இலங்கைத் தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்து இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இலங்கைவாழ் தமிழர்கள்மீது இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் ஏற்படும் உயிர் இழப்பினைத் தடுத்திட இந்திய அரசு விரைவான நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு, இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், திரு. தி.க. ராஜா, திரு. கே.வீ. ராமநாதன்,

திரு. மு.க. பெரியசாமி, திரு. கே.எல். இளவழகன், திரு. வீ.ஏ.டி. கலியவரதன், திரு. பெ. கண்ணன், திரு. டி. மூர்த்தி, திரு. அ. தமிழரசு, திருமதி பெ. கமலாம்பாள், திரு. கோ. எதிரொலி மணியன், திரு. த.அ. மேகநாதன், திரு. வை. காவேரி, திரு. இல. வேலுசாமி, டாக்டர் க. நெடுஞ்செழியன், ம.தி.மு.க. சார்பாக திரு. மு. கண்ணப்பன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. கு. செல்வம், திரு. து. ரவிக்குமார் ஆகியோர் விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தீவிலே வாழ்ந்துகொண்டிருக்கிற நம்முடைய சகோதரர்களும், சகோதரிகளுமான அப்பாவித் தமிழ் மக்களின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய உடனடித் தேவை குறித்து நாட்டின் கவனத்தையும், நடுவண் அரசின் கவனத்தையும் திருப்பும் நோக்கில், சட்டப்பேரவையில் நெகிழ்ந்த உள்ளத்துடன் நாங்கள் சிலவற்றை இங்கே கூற விழைகின்றோம். இரக்கமற்ற இலங்கை அரசின் கொடுங்கரங்களில் சிக்கி இலங்கைத் தமிழர்கள் சொல்லொணாத் துன்பங்களையும், . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசும்போது இடைஞ்சல் செய்யாதீர்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** கொடுமையான மனித உரிமை மீறல்களையும், அடைந்து வருகிறார்கள். இதைப் பன்னாட்டு சமுதாயமும் வெளி உலகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன என்று இலங்கைக்கு எதிராக தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. அகதிகளுக்கான ஐ.நா. ஆணையரகத்தின் முயற்சியில் இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி, திரு. பகவதி அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட பன்னாட்டு வல்லுநர் குழு இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமைகளை மேம்படுத்துவதற்காக தெரிவித்த பரிந்துரைகள் எவற்றையும் இலங்கை அரசு செவிமடுக்கவில்லை. இலங்கை அரசு தொடர்ந்து செயல்பட மறுத்துவிட்டது. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் சீர்கெட்டு வருவது குறித்து ஏறக்குறைய பன்னாட்டு மனித உரிமைகள் பாதுகாப்புக்

[திரு. ஜி.கே. மணி] [2008 ஏப்ரல் 23

குழுக்கள் அனைத்துமே உலகளாவிய அளவில் எச்சரிக்கைக் குரல் எழுப்பியுள்ளன. தொடர்ந்து மனித உரிமைகள் மீறப்படும், மிகக் கேடான பகுதி என்று தர வரிசைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையில் நிலைமையை ஆழமாக ஆய்வு செய்வதற்காக உயர் அதிகாரி ஒருவரை ஐ.நா. பொதுச் செயலாளர் அனுப்பியுள்ளார். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நீங்கள் சபையை நடத்தவிடாமல் இடைஞ்சல் செய்கிறீர்கள். நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* என்ன இது? இதை முடித்துவிட்டு அதற்குப் பிறகு அதை எடுப்போம், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், நீங்கள் முதலில் உட்காருங்கள். அதைப் பிறகு பார்ப்போம், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துச் சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஒன்றுபட்ட இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அமைதி வழியில் பேச்சு நடத்தி, அரசியல் தீர்வு காண்பதில்தான் எதிர்காலத்திற்கான வழி அடங்கியிருக்கிறது என்று பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்கள் அண்மையில் எழுதியிருக்கிறார். இது மிகவும் பாராட்டுதலுக்குரியது. இதைப்போலவேதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சுமுக அரசியல் தீர்வு ஏற்பட்டு, அங்கே அமைதி நிலவவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலேகூட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது, வரவேற்கக்கூடியது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

போர்ப்படைமூலம் எந்தத் தீர்வும் காண முடியாது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அனைத்துச் சமூகங்களின், குறிப்பாக இனச் சிறுபான்மையினரின் கவலைகளையும் நலன்களையும் கருத்தில் எடுத்துக்கொண்டு ஒன்றுபட்ட இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அரசியல் சிக்கல்கள், அரசமைப்புச் சட்டச் சிக்கல்கள் மற்றும் பிற சிக்கல்களுக்கும் தீர்வு காணவேண்டுமென்பதே இப்போதைய தேவை என்று பாதுகாப்பு அமைச்சகம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் இனப்பூசலுக்கு போர்ப்படை வழியிலான தீர்வை இந்தியா நம்பவில்லை என்பதே இந்தச் செய்திகள் அனைத்தின் சாரமாகும்.

2008 ஏப்ரல் 23] [திரு. ஜி.கே. மணி]

இவ்வாறு இருக்கும் நிலையில் ** இலங்கையின் போர்ப்படைத் தலைவர் சரத் ஃபொன்சேகாவை அண்மையில் இந்தியாவுக்கு வரவழைத்து எல்லா வகையிலும் சிறப்பான வரவேற்பு அளித்திருக்கிறது. போர்ப்படை வழியிலான தீர்வுகளும் திணிக்கப்படும் தீர்வுகளும் பயன் அளிக்காது என்பதை இது காட்டுகிறது. எனவேதான், உடனடியாக போர் நிறுத்தத்தை அறிவிப்பதன்மூலம்... .(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. சுதர்சனம், எல்லோரும் முதலில் உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, no. நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, no. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகு எழுந்து நிற்காதீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசி முடித்துவிடுகிறேன், அப்புறம் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, no. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசி முடித்துவிடுகிறேன், அப்புறம் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (கூச்சல்-குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 ஏப்ரல் 23

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் சார். திரு. டி. சுதர்சனம், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசிவிடுகிறேன், அப்புறம் நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள் என்று சொல்கிறேன் இல்லையா? (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, இந்திய அரசுக்கு எந்தவித நெருக்கடியும் ஏற்படாதவண்ணமே சொல்லிக்கொண்டிருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகச் சொல்லவேண்டும். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்லிவிட்டேன் அல்லவா? (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்வதில் எந்த நெருக்கடியும் சிக்கலும் இல்லை. மாண்புமிகு பிரதமர் அவர்கள் நல்ல நோக்கத்துடன் சுட்டிக்காட்டியதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதிலே காங்கிரஸ் கட்சிக்கு கருத்து மோதல் வருவதற்கு வாய்ப்பே இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வருவதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் நீங்கள் நிற்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் நீங்கள் நிற்பது முறையல்ல. நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று

2008 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

சொல்லியிருக்கிறேன் அல்லவா? உட்காருங்கள் சார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) அவர் பேசி முடிக்கட்டும். அதற்குப்பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். ஆட்சேபகரமான சொல் இருந்தது என்றால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் நிரம்ப நேரம் எடுத்துக்கொள்கிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதில் காங்கிரஸ் கட்சிக்கு நெருக்கடியே இல்லை. கருத்து மாறுபாடு வருவதற்கு வாய்ப்பு இல்லை. நான் சுருக்கமாகப் பேசிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) அவர் சொல்லி முடிக்கட்டும், திரு. சி. ஞானசேகரன். அவர் சொன்ன அந்த வார்த்தையை முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) எழுந்து நிற்கும் உறுப்பினர்கள் அவ்வளவுபேரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, எல்லோரும் உட்காருங்கள் முதலில். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். Please. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No. No. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், நான் சொல்வதை நீங்கள் கேட்கிறீர்களா இல்லையா? உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், நான் உங்களைக் கூப்பிடவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, என்ன சொல்லுங்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள். மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள்.

[2008 ஏப்ரல் 23

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இந்த இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நண்பர் மணி அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொண்டுவந்தார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் யாரும் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவ்வளவுபேரும் அப்படியே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது தகவல் கோரல் என்ற முறையில் எடுக்கப்பட்டுள்ளது. ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல. தகவல் கோரல்தான். உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** அதிலே, அவர்கள் குறிப்பிடும்போது மத்திய அரசு (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலியவரதன், திரு. ராஜா எல்லோரும் உட்காருங்கள். டாக்டர் நெடுஞ்செழியன், உட்காருங்கள். திரு. தமிழரசு, திரு. மேகநாதன், உட்காருங்கள். திரு. கண்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கண்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், எல்லோரையும் உட்காரச்சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் Point of order என்று சொல்கிறார். என்ன சொல்கிறார் என்று கேட்போம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அம்மா நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினரைத்தான் பேசச் சொல்லப்போகிறேன். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்போம். திரு. சுதர்சனம், சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு மணி அவர்கள் பேசுகிறபோது, மத்திய அரசு, ** என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். மத்திய அரசின் அமைச்சரவையிலே பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகிக்கிறது. அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசவேண்டும் என்றால் பாட்டாளி மக்கள்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கட்சியின் சார்பாக அமைச்சரவையிலே கேபினட் அமைச்சராகவுள்ள சகோதரர் அன்புமணி அவர்கள் அங்கே பேசியிருக்கவேண்டும். அதை விட்டுவிட்டு இங்கே வந்து பேசுவது அவ்வளவு முறையாகாது. ஏனென்றுசொன்னால், ** என்பது மிகவும் தவறான செயல். அதனால் அவர் குறிப்பிட்டிருக்கிற பல்வேறு வார்த்தைகளை நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி, நடுவண் அரசில் இடம்பெற்று இருக்கிறது. இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு டெல்லிக்குச் சென்ற பா.ம.க. நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் பிரதமர் அவர்களிடத்திலே, அன்னை சோனியா காந்தி அவர்களிடத்திலே, நீங்கள் கருணைகூர்ந்து இலங்கைப் பிரச்சினையிலே தலையிட்டு ஒரு அரசியல் தீர்வு, சுமுகத் தீர்வு ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கவேண்டும் என்று அதைத்தான் நேரடியாக வற்புறுத்தி வந்திருக்கிறார். இங்கே சொல்வதற்குக் காரணம், தமிழ்நாட்டிலே இருக்கிற தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வை இந்திய அரசுக்கு எடுத்துக்காட்டவேண்டும்; இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் தலையிடவேண்டும் என்று வற்புறுத்துவதற்காக இங்கே தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோமே தவிர எதிரானதாக அல்ல.

நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த நண்பர்கள் தெளிவுபட எண்ணிப்பார்க்க வேண்டும். நான் சொன்னதிலேகூட— பிரதமர் சொன்னது, அனைத்துச் சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஒன்றுபட்ட இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அமைதி வழியில் பேச்சு நடத்தி அரசியல் தீர்வு காண்பதுதான் எதிர்காலத்திற்கான வழி அடங்கியிருக்கிறது என்று பிரதமர் சொல்லியிருக்கிறார், அதைத்தான் இங்கே வலியுறுத்திச் சொல்கிறேன். பிரதமர் சொன்னதை முதலமைச்சரும் வலியுறுத்துகிறார்கள். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் மணி அவர்களைக் கேட்கிறேன், பிரதமர் சொல்லியதில் 'ஒன்றுபட்ட இலங்கை' என்று சொல்லுகிறாரே! அதை மணி அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கேற்ப ஒன்றுபட்ட இலங்கை உருவாக வேண்டும். அங்கே ஒன்றுபட்ட இலங்கை என்ற அடிப்படையில், நான் அதை இறுதியாகச் சொல்லிவிடுகிறேன். முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு, இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தியா-இலங்கை ஒப்பந்தம் 29-7-1987-லே ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் இராஜிவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தம். இந்தியாவுக்கும், இலங்கைக்குமான ஒப்பந்தம். இப்பொழுது அந்த ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு அங்கே தேர்தல் நடத்த இருக்கிறது. வரக்கூடிய 28 ஆம் தேதி அங்கே தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் 'ஒன்றுபட்ட இலங்கை' என்பதற்குக் காரணம், அந்த ஒப்பந்தத்தை மீறக் கூடாது என்பதை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்திச் சொல்கிறோம். அதேநேரத்தில், வடக்குக் கிழக்கு மாகாணம் குறித்த இராஜிவ்-ஜெயவர்த்தனே இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு தேர்தல் நடத்த உள்ளது. தேர்தல் பணி தொடங்கி 28-4-2008 அன்று அஞ்சல் வாக்குப் பதிவும் நடைபெறவுள்ளது. இந்நிலையில் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தை மீறி, இலங்கை அரசு தேர்தல் நடத்தக்கூடாது என்று இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று இங்கே நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

அதுமட்டுமல்ல, சுருக்கமாக இந்திய பிரதமர் தெளிவுபடக் கூறியுள்ளபடி, அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைதி வழியில் பேச்சு நடத்தி, அரசியல் தீர்வு காணும் நடைமுறையில் சேர்வதற்காக இலங்கையில் போராடிக்கொண்டிருக்கிற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்களும் இதற்கு ஒத்துக்கொள்ளவேண்டும். இதைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

பிரதமர் சொன்னதுமாதிரி அங்கு நல்ல தீர்வு காண்பதற்கு இந்தியா எடுக்கிற முடிவுக்கு விடுதலைப் புலிகளும் ஒத்துக்கொள்ளவேண்டும்

என்ற தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். பிரதமர் சொன்னதை விடுதலைப் புலிகளும் ஒத்துக்கொள்ளவேண்டும் என்றுதான் கேட்கிறோம். வேறு ஒன்றும் சொல்லவில்லை; தவறே இல்லை. ஆகவேதான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இங்கே பாருங்கள், நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள் என்றுதான் ஆரம்பத்திலே சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சரப்ஜித்சிங்குக்கு அளிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யவேண்டுமென்று நம்முடைய பிரதமர் சொன்னார்; இந்திய நாடு சொல்கிறது; முதலமைச்சர் சொல்கிறார். உலக நாடுகள் பூராவும் இதை வலியுறுத்துகிறோம். இதை வலியுறுத்துகிற அதேவேளையில், தினந்தோறும் நூற்றுக்கணக்கிலே தமிழர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றிச் சொல்லக்கூடாதா? அக்காரணத்தினாலேதான் இங்கே நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வது, தமிழக அரசு இம்மாமன்றத்திலே இதுபோன்ற ஒரு நல்ல தீர்மானத்தை நிறைவேற்றி, நடுவண் அரசை வலியுறுத்தவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன். *(குறுக்கீடு)*

***திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள், பார்த்துவிடுவோம். *(குறுக்கீடுகள்)*

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்கப்படக்கூடிய சூழ்நிலை இலங்கை நாட்டிலே இருந்து கொண்டிருக்கின்றது. 1944, 1949 ஆம் ஆண்டு வாக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரச்சினையில் கடந்தகால நிகழ்வுகளைச் சுருக்கமாக நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அங்கே இருக்கக்கூடிய தமிழர்கள், சிங்கள மக்களிடையேயுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், ஈழத்து காந்தி என்று மதிக்கப்படுகின்ற தந்தை செல்வா அவர்களும்,

[திரு. மு. கண்ணப்பன்] [2008 ஏப்ரல் 23

பண்டாரநாயகா அவர்களும், 1957-லே ஒரு ஒப்பந்தத்தைச் செய்தார்கள். குறைந்தபட்ச அதிகாரத்தை, உரிமைகளைத் தமிழர்களுக்குத் தருவதற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஒப்பந்தம் அது. அந்த ஒப்பந்தமும் கிடப்பிலே போடப்பட்டது. அதேபோல, 1965 ஆம் ஆண்டில் தந்தை செல்வா-சேனநாயகா ஒப்பந்தம் அதுவும் கிடப்பிலே போடப்பட்டது. அதேபோல, இந்திய நாட்டுடன் 1954-ல் பண்டித ஜவஹர்லால் நேரு-கொத்தலாவலா இடையே ஏற்பட்ட ஒப்பந்தமும் செயல்படுத்தப்படவில்லை. 1962-ல் சிரிமாவோ பண்டாரநாயகா—மாண்புமிகு சாஸ்திரி அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமும் கிடப்பிலே போடப்பட்டது. அதேமாதிரி, மீனவர்கள் உரிமை சம்பந்தமாக 1976-ல் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது; அதுவும் செயல்படுத்தப்படவில்லை. கடைசியாக, 1987-ல் மாண்புமிகு இராஜிவ் காந்தி-ஜெயவர்த்தனே ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த ஒப்பந்தமும் முறையாகச் செயல்படுத்தப்படாமல், கிடப்பிலே போடப்பட்டது. இன்றைக்கு அங்கே இனப் பிரச்சினை தலைதூக்கி, கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-55

1987-ல் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் தமிழர் சமுதாயத்தினுடைய வரலாற்று வாழ்விடம் என்று அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இது 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி பொது மக்களால் வாக்கு அளிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு, அதற்குப் பிறகு அது ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையில் அங்கே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று, இராஜிவ் காந்தி ஒப்பந்தத்திலே, 1987-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு மாறாக இலங்கை அரசே அங்கே இருக்கக்கூடிய நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து, அவர்களே நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையும் பெற்றிருக்கிறார்கள். இரண்டு மாகாணங்களாக இருக்க வேண்டுமென்று. இப்பொழுது வடக்கு, கிழக்கு மாகாணங்களை, தனித் தனியாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். இப்பொழுது கிழக்கு மாகாணத்திலே தேர்தல் என்று அறிவித்து, தமிழர்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, சிங்களவர்களை அங்கே குடியேற்றி, மீண்டும் இனப் பிரச்சினை அதிகமாகக்கூடிய சூழ்நிலையை, அங்கே உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அதேபோல, 1987 ஆம் ஆண்டு போடப்பட்ட

2008 ஏப்ரல் 23] [திரு. மு. கண்ணப்பன்]

ஒப்பந்தத்தினுடைய பல்வேறு இனங்கள் இப்போது மீறப்பட்டிருக்கின்றன. இந்த ஒப்பந்தம் என்பது இந்தியா-இலங்கை ஒப்பந்தம், சுயாதிபத்திய உரிமை கொண்ட, இரண்டு அரசுகளுக்கு இடையில் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தமாகும். சர்வதேச சட்டத்தின்கீழ் வலுவாக இருக்கக்கூடிய ஓர் ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு ஒருபொழுதும், எப்பொழுதுமே எந்தக் காலத்திலும், தட்டிக்கழித்துவிட முடியாது. அந்தவிதமாகத் தட்டிக் கழிப்பதை, இந்திய அரசு எந்த வகையிலும் அனுமதிக்கக் கூடாது என்று நாம் வலியுறுத்த வேண்டும்.

இங்கேயுள்ள மீனவர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரை 1974-76 ஆம் ஆண்டில் கச்சத் தீவு மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான இலங்கை-இந்தியா ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வந்தாலே வட கடலில் தமிழக மீனவர்கள் பாதுகாப்புடன் இருப்பார்கள் என்று அந்த ஒப்பந்தத்திலே சொல்லப்பட்டது. 1976-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு இந்த ஒப்பந்தங்கள் நடைமுறையிலே இல்லாமல் போயின. 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு கச்சத் தீவிலுள்ள புனித அந்தோணியார் கோயிலுக்கு தமிழக கிறித்துவப் பெருமக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தக் கோயில் திருவிழாவே அங்கு நடப்பதில்லை. அந்தக் கோயிலையே இப்போது இலங்கை அரசு மூடிவிட்டது. ஒப்பந்தங்கள் போடுவதும், அவற்றை நடைமுறைப்படுத்தாமல் பின்வாங்குவதும் இலங்கை அரசினுடைய கடந்த கால வரலாறு.

ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாக்கப்படாமல் 1987-லே போடப்பட்ட ஒப்பந்தத்தை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இன்றைக்கு விடுதலைப் புலிகளை அழிக்கிறோம், ஒடுக்குகிறோம் என்ற பெயரில் ஈழத் தமிழ் மக்கள் மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். குழந்தைகள், தாய்மார்கள், அதேமாதிரி மதத் தலைவர்கள், இந்துக் கோயில்கள், கிறித்துவக் கோயில்கள், இப்படி நாள்தோறும் அவையெல்லாம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட படுகொலைகளையும் தடுத்து நிறுத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் அருகிலே இருக்கக்கூடிய நம்முடைய நாட்டிற்கு இருக்கிறது என்ற அடிப்படையில் ஏதோ மத்திய சர்க்காருடைய கொள்கைதான் நம்முடைய கொள்கை; அவர்கள் எதைச்

[திரு. மு. கண்ணப்பன்] [2008 ஏப்ரல் 23

சொல்கிறார்களோ அதை நாம் பின்பற்றுவோம் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்காமல், தமிழர்கள் வாழக்கூடிய பகுதி, நம்முடைய இன மக்கள் அங்கே இருக்கிறார்கள் என்ற உணர்வோடு நம்முடைய கருத்தை வலியுறுத்தி இந்திய அரசாங்கத்தைச் செயல்பட வைக்க வேண்டும்.

** எந்த வகையிலும், தமிழர்களைக் காக்கக்கூடிய அந்த மாபெரும், மகத்தான பொறுப்பு நம்முடைய தமிழக அரசுக்கு இருக்கிறது என்ற அடிப்படையில் இங்கே நாம் அனைவரும் ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு தமிழக மக்களைக் காப்பாற்றக்கூடிய பெரும் பொறுப்பும், கடமையும் இன்றையதினம் இருக்கிறது. எனவே, அத்தகைய தமிழ் மக்களைக் காப்பாற்றுங்கள், ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டி, விரும்பிக் கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் அல்லது திரு. து. ரவிக்குமார். இருவரும் இருக்கையில் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

*முற்பகல் 11-00*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சினையைப்பற்றி பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. மணி அவர்களும், நம்முடைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அண்ணன் கண்ணப்பன் அவர்களும், இங்கே பல்வேறு கருத்துகளை வெளியிட்டார்கள். பல்வேறு ஒப்பந்தங்கள் போடப்பட்டன; அந்த ஒப்பந்தங்கள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. கண்ணப்பன் அவர்கள் *(குறுக்கீடு)* மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. கண்ணப்பன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2008 ஏப்ரல் 23] [திரு. டி. சுதர்சனம்]

உண்மையிலேயே அந்த ஒப்பந்தங்கள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படாமல் போனதற்கு யார் காரணம் என்று நீங்கள் தெளிவாக இந்த அவையிலேயே தெரிவிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இலங்கையிலே போடப்பட்ட ஒப்பந்தம்— கடைசியிலே இராஜிவ் காந்திக்கும் ஜெயவர்த்தனே அவர்களுக்கும் இடையே 29-7-1987 அன்று ஓர் ஒப்பந்தம் காணப்பட்டது. அந்த ஒப்பந்தத்திலே உள்ள ஷரத்திலேகூட 2-வது ஷரத்து என்ன சொல்கிறது என்று சொன்னால், இலங்கை பல்வகைப்பட்ட மக்கள் ஒரு வாழ்கின்ற நாடு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை ஒத்துக்கொள்ள வைத்ததே அமரர் இராஜிவ் காந்தி அவர்கள். இலங்கையும் இந்தியாவும் போட்ட அந்த ஒப்பந்தத்தால்தான் இலங்கைக்கு மறுவாழ்வு தேடிக்கொடுக்க வேண்டும் என்று சொல்கின்ற நிலை இப்போது உலகம் பூராவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றாததற்கு யார் காரணம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அமரர் இராஜிவ் காந்தி அவர்கள் உயிரோடு இருக்கின்றபோது இலங்கைக்குச் சென்றார்கள். இந்த ஒப்பந்தத்தைக் கண்டார்கள். ஒப்பந்தம் கண்டு அவர் திரும்பி வருகின்றபோது இலங்கை சிப்பாய் தன் கையிலே இருந்த துப்பாக்கியைத் திருப்பி அவரை அடித்தார். அதை இந்த நாடு மறக்கவில்லை. அப்போது அந்த ஒப்பந்தம் போடப்பட்டது. ஒப்பந்தம் போடப்பட்டபோது ஒப்பந்தத்தை ஒத்துக்கொள்வதாக முதலிலே அறிவித்தார்கள். அதற்குப் பின்னாலே இந்த ஒப்பந்தத்தைக் கிடப்பிலே போட வேண்டுமென்று எண்ணியது, இந்திய அரசு அல்ல. இந்திய அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் இருந்தால், ஒரு நாளும் அந்த ஒப்பந்தத்தையே போட்டிருக்காது. அந்த ஒப்பந்தம் போடப்பட்ட பின்னால், இவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், ஒரு கட்டத்திலே அமரர் இராஜிவ் காந்தி அவர்கள் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களையே அழைத்து, நீங்கள் இலங்கைக்குப் போய் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணுங்கள் என்று தெரிவித்தார்கள். டாக்டர் கலைஞர் அவர்களும் நானும் இலங்கைக்குப் போகிறேன், அங்கே போய்ச் பிரச்சினையைப் பேசி முடிக்கிறேன் என்று சொல்லி, சென்னைக்கு வந்தார்கள். சென்னைக்கு வந்தவுடனே அவர்களுடைய காதிலே விழுந்த செய்தி, அவருக்கே அதிர்ச்சியளிக்கக்கூடிய செய்தியாக இருந்தது. அந்தச் செய்திக்கு, அந்த நிலைமைக்கு யார் காரணம் என்பதை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

[2008 ஏப்ரல் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணப்பன், உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** அது என்னவென்று சொன்னால், இலங்கைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் தூதுவராகப் போகவேண்டுமென்று இராஜிவ் காந்தி அவர்கள் கலைஞரை வேண்டிக்கொண்டதற்குப் பின்னால், டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னைக்கு வந்தவுடனே, அன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த, இன்றைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்கள், இங்கேயிருந்து இலங்கைக்கு, பாஸ்போர்ட் இல்லாமல், கள்ளத் தோணியிலே சென்றார்கள். அது மிகவும்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கண்ணப்பன், உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். பேசி முடிக்கட்டும்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் கண்ணப்பன் அவர்கள், வைகோ அவர்கள் போகவில்லையென்று இங்கே மறுப்புத் தெரிவிக்க விரும்புகிறாரா? அப்படி மறுப்புத் தெரிவித்தால் தெரிவித்துக்கொள்ளலாம். அதனைப்பற்றி ஒன்றும் கவலையில்லை. ஆனால். . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும், உட்காருங்கள் நீங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** அதற்கு இலங்கையிலே வாழ்கின்ற. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் எழுந்துகொண்டே இருக்கிறீர்கள். உட்காருங்கள், அவர் பேசி முடித்தவுடன் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள்.

*முற்பகல் 11-05*

**திரு. டி. சுதர்சனம்:** அப்பாவித் தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இந்திய அரசுக்கு நிறையவே உண்டு. அப்பாவித் தமிழர்கள்மீது, அவர்கள் தாக்கப்படுவதை எந்தக் காங்கிரஸ்காரர்களும், எந்த இந்திய மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)* நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. *(குறுக்கீடு)* ஆனால், அந்த அப்பாவித் தமிழர்கள் பெயரிலே, ஒரு வன்முறைக் கலாச்சாரம் உருவாவதை, அந்த வன்முறைக் கலாச்சாரத்தின்மூலமாக, அங்கேயிருக்கின்ற விடுதலைப் புலிகளினாலே, நம்முடைய மண்ணிலே,

ஸ்ரீபெரும்புதூரிலே, காங்கிரஸ் கட்சியின் தலைவர் படுகொலை செய்யப்பட்டதை, எந்தக் காங்கிரஸ்காரனும் மறந்துவிடமுடியாது; மன்னிக்கவும் முடியாது. உலகத்திலே இருக்கின்ற அத்தனை பேரும், தமிழர்களாகட்டும், இந்தியர்களாகட்டும், அதை எந்தக் காலத்திலும் மன்னிக்கமாட்டார்கள்.

அப்படியிருக்கின்றபோது, இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்கவேண்டுமென்ற அக்கறை, உலகத்திலே இருக்கின்ற தமிழர்களுடைய தலைவராக, ஒப்புயர்வற்ற தலைவராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, எல்லோரையும்விட நிறையவே உண்டு என்று நாங்கள் நம்புகிறோம். அதுதான், அவர் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றுகின்ற ஒரு சேவை என்பதையும் நாங்கள் தெளிவாகவே தெரிந்து வைத்திருக்கின்றோம். அதனால்தான், இந்திய அரசு கொண்டு வருகின்ற பல்வேறு திட்டங்களுக்குத் தமிழக அரசு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

நண்பர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இங்கே பேசுகின்றபோது, ** அந்த வார்த்தைகளை நீங்கள் தயவு செய்து அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் யாரும் பேசாதீர்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இந்த ஒப்பந்தங்களை நிறைவேற்றாததற்கு முழுக் காரணம் யார் என்பதை நான் இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் விடுதலைப் புலிகள்தான் இந்த ஒப்பந்தங்கள் நிறைவேறாததற்கு முழுக் காரணம் என்பதை *(குறுக்கீடுகள்)* நான் ஒரு குற்றச்சாட்டாகவே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கேயிருக்கின்ற அப்பாவித் தமிழர்களுக்கு... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கண்ணப்பன், நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். அதற்குப்பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** அங்கேயிருக்கின்ற அப்பாவித் தமிழர்களுக்கு நல்வாழ்வைத் தேடிக் கொடுக்கவேண்டும்; அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்ற வேண்டுமென்ற அக்கறை இந்திய அரசுக்கு நிறையவே உண்டு.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம், கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** இதோ முடித்துவிடுகிறேன். இருந்தாலும், இங்கே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், அந்தத் தீர்மானத்திலேயிருக்கின்ற ஆட்சேபகரமான விஷயங்களை நீங்கள் எடுத்துவிட்டு, அந்தத் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கின்ற விதத்திலே, (குறுக்கீடு) இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே அவர்கள் பேசிய ஆட்சேபகரமான வார்த்தைகளை நீக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகின்ற இயக்கம் தமிழகத்திலே ஊடுருவுவதை ஒருக்காலும் நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது; வன்முறைக் கலாச்சாரத்திற்குத் தமிழகத்திலே இடமில்லை; வன்முறைக் கலாச்சாரம் தமிழகத்திலே பரவுவதை எந்தக் காரணத்தை முன்னிட்டும் நாம் ஆதரிக்கமுடியாது. தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடித் தரவேண்டும் என்கிற எண்ணம் எல்லோருக்கும் இருக்கின்றபோது, அந்தப் பெயரிலே இங்கே வந்து பல்வேறுபட்ட சமூக விரோதச் செயல்களைச் செய்வதை அனுமதிக்கமுடியாது என்பதைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

***திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் பேசும்போது, திரு. வைகோ அவர்கள் ஈழ நாட்டிற்குக் கள்ளத் தோணியிலே சென்றதாகக் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடுகள்) இன்னும் சொல்கிறேன்; கள்ளத்தோணியிலே போனதைப்பற்றி நாங்கள் பெருமையாக நினைக்கிறோமே தவிர, சிறுமையாக நினைக்கவில்லை. (குறுக்கீடுகள்) அங்கேயிருக்கிற தமிழர்களைப்பற்றித் தெரிந்துகொண்டு வருவதற்காகப் போனாரேதவிர, வேறொன்றுமில்லை. ** (குறுக்கீடுகள்) அதுதான் நடக்கிறது இன்றைக்குச் சபையிலே. (குறுக்கீடுகள்) அதுதான் நடக்கிறது; வேறு என்ன நடக்கிறது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கண்ணப்பன், no, no. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2008 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப் பார்க்கிறேன். அதை நான் பார்த்து அந்த வார்த்தைகளை எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) அந்த ஆட்சேபகரமான வார்த்தைகள் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆட்சேபகரமான வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படும், உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*முற்பகல் 11-10*

## 3. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசை வலியுறுத்துதல்

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை பரிவுணர்வோடும், இரக்க சிந்தனையோடும், தமிழர்களுக்கு உதவிட வேண்டும் என்கின்ற பாச மனப்பான்மையோடும் கொண்டுவந்து, அதே அடிப்படையிலே விவாதம் நடைபெற்றிருந்தால் நான் மிகுந்த ஆறுதல் அடைவேன். ஆனால், எந்த நோக்கத்திற்காக நண்பர் மணி அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவதாகச் சொல்லி முன்மொழிந்தாரோ அந்த நோக்கம் சிதைகின்ற வகையில், இந்த அவையிலே சில வார்த்தைப் பிரயோகங்கள் அமைந்ததற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

நாம் இந்த அவையை, இந்தியப் பேரரசின் ஆதிக்கத்திலே உள்ள ஒரு நிருவாகத்தின் அடிப்படையில் நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்த அவையிலே நாம் எழுப்புகின்ற கருத்துகள், நிறைவேற்றுகின்ற தீர்மானங்கள் எதுவானாலும் அந்த ஆணி வேரை அசைத்துவிடக்கூடாது. அதுதான் இந்தியாவினுடைய ஒருமைப்பாடு, இறையாண்மை இவையாகும். இங்கே நம்முடைய அருமை நண்பர், தம்பி கண்ணப்பன் அவர்கள், திரு. சுதர்சனம் அவர்களுடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்தைச் சொல்ல எழுந்தபோது, உணர்ச்சி வேகத்தில் ** அவர் சொன்னது நான் அவரிடத்திலே எதிர்பார்க்காத ஒன்று. அவர் துடிப்பாகப் பேசக்கூடியவர்; தீவிரமாக சிந்திக்கக்கூடியவர், நான் மறுக்கவில்லை. ஆனால், இப்படிக்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.